


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்,

மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (23.02.2017) நடைபெற்றது.

செ.வெ.எண் : 136/2017 நாள்: 23.02.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில்,**
**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**
**இன்று (23.02.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (23.02.2017) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 17.02.2017 அன்று பேச்சிப்பாறை அணையின் நீர்மட்ட இருப்பு 3.80 அடியும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்ட இருப்பு 8.00 அடியும், சிற்றார்-1 அணையின் நீர்மட்ட இருப்பு 1.25 அடியும், சிற்றார்-2 அணையின் நீர்மட்ட இருப்பு 1.34 அடியும், பொய்கை அணையின் நீர்மட்ட இருப்பு 4.10 அடியும், மாம்பழத்துறையாறு நீர் மட்ட இருப்பு 25.51 அடியும் உள்ளது.

20.02.2017 அன்று வரை வேளாண் விரிவாக்க மையம் மூலம் 245.545 (மெ.டன்) பரப்பில் நெல் பயிறு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 01.04.2016 முதல் 20.02.2017 முடிய 20,079 நெட்டை ரக தென்னங்கன்றுகளும், 19,035 நெட்டை குட்டை ரக தென்னங்கன்றுகளும், 1,139 குட்டை நெட்டை ரக தென்னங்கன்றுகளும் ஆக மொத்தம் 40,253 தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தடையின்றி உரம் விநியோகிப்பதற்காக டான்பெட் நிறுவனத்தில் 462 மெட்ரிக் டன்னும், கூட்டுறவு சங்கங்களில் 2,305 மெட்ரிக் டன்னும், தனியார் விற்பனையாளர்களிடம் 425 மெட்ரிக் டன்னும் ஆக மொத்தம் 3,192 மெட்ரிக் டன் உரம் இருப்பில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. பின்னர் கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

25.02.2017 அன்று அளந்து எல்கை நிர்ணயம் செய்வதாக கல்குளம் வட்டாட்சியர் அவர்கள் அறிக்கை அளித்துள்ளார்கள். உதவி பொறியாளர் முன்னிலையில் குளம் அளந்து, எல்கை நிர்ணயம் செய்து, ஆக்கிரமிப்பு குறித்த வரைபடம் மற்றும் படிவம்-1 வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட பின், ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பிள்ளையார்குளம் ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பாக, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. எல்கை நிர்ணயம் செய்து, ஆக்கிரமிப்பு குறித்த வரைபடம் மற்றும் படிவம் -1 கிடைக்கப்பெற்றதும், தமிழ்நாடு ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம் 8/2007-ன்படி, அகற்றப்படும். குளம் தூர்வாரி ஆழப்படுத்த அரசின் சிறப்பு நிதி ஆதார ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், சுழற்சி முறையில் தோவாளை கால்வாயில் தண்ணீர் விநியோகிக்கும்போது, மருங்கூர் பெரியகுளத்துக்கு தண்ணீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அமராவதி குளத்துக்கு தண்ணீர் வரும் நீர்வரத்து கால்வாயில் செடிகொடிகள் அகற்றி,

கால்வாய் தூர்வாரிட ரூ.1.00 இலட்சம் மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், இராமசமுத்திரம் எஸ்கேப் ஷட்டர் பழுது சரி செய்ய ரூ.50,000/- மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் பழுது சரிசெய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், தேவர் குளத்தின் மறுகால் பகுதியில் ஏற்பட்டுள்ள உடைப்பினை சரி செய்யும் பணிக்கு ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஒப்பளிப்பு பெறப்பட்ட பின், பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், கன்னியாகுமரி மாவட்ட ரப்பர் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் தொடர்ந்து, குவிந்த நட்டத்தில் செயல்பட்டு வருவதால் உறுப்பினர்களுக்கு பங்கு ஈவு தொகை வழங்க இயலாத நிலை உள்ளது. சங்கம் நிகர இலாபம் ஈட்டும் பட்சத்தில் பங்குதாரர்களுக்கு பங்கு ஈவு தொகை வழங்கப்படும் எனவும், வன்னியூர் முதல் மாலைக்கோடு வரை தூர்வார வரும் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ள முன்னுரிமை கொடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள், விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

கூட்டத்தில் இணை இயக்குநர் (பொறுப்பு) திரு. சந்திரசேனநாயர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், பொதுப்பணித்துறை (நீர் ஆதரவு) செயற்பொறியாளர் பொறி சுப்பிரமணியன், வட்டாட்சியர்கள், செயல் அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.